# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட கலைமாணித் தேர்வு – 2009/2010

## மீள்பரீட்சை - வெளிவாரி (2017 – March /April)

## EDU 101 கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்களும் மனிதவள அபிவிருத்தியும்

## (Basic Concept of Education and Human Resource Development)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

ஏதாவது ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

01. அ. ஜோன்டியூவியின் பயன்பாட்டுவாதக் கல்விக் கருத்துக்களை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

ஆ. தற்கால ஆசிரியர்களால் இலட்சியவாதக் கருத்துக்கள் பிரயோகிக்கப்படும் தன்மை குறித்து உமது கருத்துக்களை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

02. அ. முன்பள்ளிக் கல்வி நடைமுறைகளில் ரூசோவின் இயற்கைவாதத் தத்துவம் பின்பற்றப்படும் விதத்தினை ஆராய்க. (10 புள்ளிகள்)

ஆ. மகாத்மா காந்தியின் கல்விச் சிந்தனைகளின் சாதக, பாதகத் தன்மைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

அ. முறைசார் கல்வி

ஆ. தொழிற்கல்வி

இ. கல்வியில் சமூக நோக்கம்

ஈ. வாழ்நாள் நீடித்த கல்வி

( 4 x 5 = 20 புள்ளிகள்)

04. அ. மனிதவளத்தை விருத்தி செய்வதில் நேரவளத்தின் பங்கு குறித்துக் கருத்துரைக்க. (10 புள்ளிகள்)

ஆ. நேரவளம் வீணாக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, நேர வளப்பயன்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

05. அ. இருபத்தோராம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான உயர்கல்வியை வழங்குவதில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

ஆ. வேலைவாய்ப்புக்களுக்கு உகந்தவகையில் கலைத்துறைப் பட்டதாரிகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தித் தகுந்த ஆலோசனைகளை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்

06. பாடசாலைகள் தமது இலக்கினை அடைவதில் சமகாலத்தில் எதிர்நோக்கு பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளையு முன்வைக்குக. (20 புள்ளிகள்

07. அ. தனியாள் விருத்தியில் கல்வியின் பங்களிப்புக் குறித்து ஆராய்க. (10 புள்ளிகள்

ஆ. பாடசாலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்

08. தற்காலத்தில் சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட் விளக்குவதுடன், அவற்றுக்கான பரிகாரச் செயற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளு வழிவகைகளைக் குறிப்பிடுக. (20 புள்ளிகள்